செ.வெ.எண்: 754 நாள்: 19.11.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை வெள்ள தடுப்பு நடவடிக்கைக்காக 36 இடங்களில் வெள்ள தடுப்பு தளவாட பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள் தகவல்**

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டம் நாகத்தி,உமையவள் ஆற்காடு ஆகிய ஊராட்சிகளில் கோன கருங்கள் ஆறு பகுதிகளில் வெள்ள தடுப்பு முன்னேற்பாடு பணிகளையும்,கண்டியூர் காவேரி உப கோட்டம்,பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் அலுவலகத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள வெள்ளை தடுப்பு பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப,அவர்கள் இன்று(19.11.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டம் நாகத்தி,உமையவள் ஆற்காடு ஆகிய ஊராட்சிகளில் கோன கருங்கள் ஆறு பகுதியில் வெள்ள தடுப்பு முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு வெள்ளம் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் வெள்ளை தடுப்பு பொருட்களை தயார் நிலையில் வைத்திருக்கும் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து அப்பகுதி விவசாய பொதுமக்களின் கோரிக்கையையேற்று வயல் பாசனவடிகால் வாய்க்காலில் படர்ந்துள்ள ஆகாய தாமரை மற்றும் செடிகளை உடனடியாக ஜே.சி.பி கனரக இயந்திரத்தின் மூலம் அகற்றிட உள்ளாட்சி துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர் கண்டியூர் காவேரி உப கோட்டம் பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் அலுவலகத்தில் வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மணல் மூட்டை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதையும், மர அறுவை இயந்திரம் நன்றாக செயல்படுகிறதா? என இயக்கிப் பார்த்தும் அருகில் உள்ள மரத்துண்டுகளை அலுவலர்கள் மூலம் அறுத்து பார்த்து ஆய்வு மேற்கொண்டார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 36 இடங்களில் ஒரு இலட்சத்து 58 ஆயிரம் காலி சாக்குப்பைகளும்,49,900 மணல் நிரப்பிய சாக்கு மூட்டைகளும்,12,969 சவுக்கு மர கம்புகளும்,7,520 சவுக்கு மரத் துண்டுகளும்,தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது

மாவட்டத்தில் உள்ள ஆறுகள்,கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் 944.97 கிலோமீட்டர் நீளத்திற்கு ரூபாய் 2,291.90 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது குடிமராமத்து திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 109 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு கால்வாய்கள் வாய்க்கால்கள் நீரொழுங்கி கட்டுமோனங்கள்,கட்டுமானங்கள் பழுதுநீக்கும் பணி,ஏரிகள் சீரமைக்கும் பணி ஆகியவை செயல்படுத்தப்பட்டுள்ளது மேலும் அணைக்கட்டுகள் அடைப்பு பலகைகள் மற்றும் கரைகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டுள்ளதால் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் வெள்ள சேதம் ஏற்படாமல் தடுக்க முன்னேற்பாடு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்

இவ் ஆய்வின் போது காவேரி உபகோட்டம் பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.ஆனந்தன்,உதவி பொறியாளர்கள் திரு.சிவக்குமார் திரு.யோகேஸ்வரன் மற்றும் தஞ்சாவூர்,திருவையாறு வட்டாட்சியர்கள்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள்.விவசாயிகள் உடன் இருந்தனர்

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.